<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 495/2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW-6**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானசீலன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 72 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஜவுளிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில், தனது கடையில் எதிரி அருளாந்தம் வேலை பார்த்து வந்தார் என்றும், அவருக்கு சொந்தமான இடத்தை பத்து இலட்சத்திற்கு கிரையம் பேசி அட்வான்ஸாக மூன்று இலட்சம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்நிலையில் கிரையம் பேசிய நபர் போதுமான பணமில்லை என்றும், 3 இலட்சத்தை திருப்பி கேட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 17.06.2019 ம் தேதி, மதியம் 02.00 மணிக்கு அருளாந்தத்திற்கு கொரியர் வந்தது என்றும்,

அதை வாங்கி படித்து பார்த்தபோது, அருளாந்தம் சோகமாக இருந்தார் என்றும், அதன் பின்னர் அவர் பணிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. 18.06.2019ம் தேதி, இரவு 08.45 மணிக்கு எதிரி அருளாந்தம் கையில் அரிவாளுடன் வசந்தாவின் வீட்டிற்கு சென்று அரிவாளை காட்டி மிரட்டி, அரிவாளால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக கேள்விபட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:14:50 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2023**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கையா நாடார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில், எதிரிக்கும், வசந்தாவிற்கும் இடம் விற்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. 18.06.2019 ம் தேதி, இரவு 08.00 மணிக்கு நான் சொந்த வேலையாக கீழசுரண்டைக்கு சென்று விட்டு, 08.45 மணிக்கு வரும்போது வசந்தாவின் வீட்டிற்கு எதிரி அருளாந்தம் கையில் அரிவாளுடன் வந்து அட்வான்ஸ் பணத்தை கேட்டு அரிவாளால் சரமரியாக வெட்டி காயம் ஏற்படுத்தி இருசக்கரவானத்தில் சென்று விட்டார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்ததாக போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **–**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:15:02 +0530